பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மானிப்பாயில்
ஓடுகள், பெயின்ற் வகைகள், சீமெந்து, தகரம், வாளிகள், பட்டம், கேட்ர்கள், ஜி. ஐ. பைப் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்.
றஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்
(மருதடி விநாயகர் ஆலய அண்மையில்)
பிரதான வீதி, மானிப்பாய்.

# உதயன்

விலை ரூ2/50

★ கட்டடப் பொருட்கள்
★ கம்பி வகைகள்
★ கம்பி வலைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்வதற்கு எம்மை நாடுங்கள்!
றஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்
(மருதடி விநாயகர் ஆலய அண்மையில்)
பிரதான வீதி, மானிப்பாய்,

சுடர்: 4 சுக்கில ஞுல ஆடி மீ 12 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 23 (27 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 199

## வடமராட்சித் தாக்குதலில் 15பேர் பலி!! பதற்றம் தொடர்கிறது

பருத்தித்துறை, ஜூலை 27

பருத்தித்துறை, புலோலி, மற்றும் துன்னாலை, நவிண்டில், யாக்கரைப் பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமும் நடந்த பலத்த ஷெல் வீச்சுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் மொத்தம் பதினைந்து பேர் பலியானார்கள். இவர்களில் அனேகர் பொதுமக்கள்.

இச் சம்பவங்களின் போது ஐந்து கடைகளும் தீக்கிரையாகியுள்ளன

துன்னாலையில் செவ்வாயன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான ஓர் இளம்பெண், அவரது தாய், பேத்தியார் ஆகியோரின் சடலங்கள் காரில் ஏற்றிச் செல்லப்பட்ட போது, கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதுடன், சடலங்களும் காரும் எரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

இச் சம்பவங்கள் பற்றித் தெரியவருவதாவது;-

செவ்வாய்க்கிழமை மாலை சுமார் 5-30 மணியளவில் யாக்கரை முகாம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

புதன்கிழமை காலை 7-30 மணி முதல் 10 மணிவரை பருத்தித்துறை ஓராம்சட்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய கம்பெனிதீக்கிரை

கொழும்பு, ஜூலை 27

பிலியந்தலையில் உள்ள இந்தியருக்குச் சொந்தமான ஹியூப்பைப்கம்பெனி கோஷ்டி ஒன்றினால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்தத் தொழிற்சாலையில் 100க்கு அதிகமானோர் வேலை செய்துவந்தனர். [உ-ஒ]

### ஹர்த்தால்

கொழும்பு, ஜூலை 27

புதன்கிழமையில் இருந்து ஐந்து தினங்களுக்கு ஹர்த்தால் அனுட்டிக்குமாறு இனந்தெரியாத நபர்கள் கொழும்பில் அரசு அலுவலங்களுக்கு சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எப்.முகாம்மீது ஸ்ரீலங்காப் படை தாக்கு!

### கிளிநொச்சியில் பதற்றம்

வட்டக்கச்சி, ஜூலை 27

கிளிநொச்சியில் ஈ. பி. ஆர். எல். எப். முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலின்போது ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த இருவர் காயம் அடைந்தனர். அவர்களில் ஒருவர் காலை இழந்தார்.

இலங்கை ராணுவமே இத்தாக்குதலை நடத்தியதாக வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

அதேசமயம் கிளிநொச்சியில் இடம்பெற்ற ரொக்கட் தாக்குதலில் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் வேறு இருவர் காயமடைந்தனர் என்றும் பி. பி. சி. நேற்று மாலை அறிவித்தது.

இத்தாக்குதலை இலங்கை இராணுவமே நடத்தியதாகவும், அவர்களின் முகாம் பக்கமாக இருந்தே ரொக்கட் வந்ததாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டிருப்பதாக பி. பி. சி. மேலும் தெரிவித்தது.

இச்சம்பவம் பற்றி இந்தியத்தரப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



என்ன இவையும் எண்பத்தேழாம் ஆண்டுப் பொருளாதாரத் தடை ''பற்றேறினை'' படிப்படியா ஒவ்வொன்டையும் தடுக்க நினைப்பினமோ சிலவேளை...!

## ★ கொழும்பு நகரம் செயலிழந்தது

# இந்திய நிறுவனங்கள்மீது குண்டு வீசித் தாக்குதல்!

### அரசைக் கவிழ்க்கும் முயற்சி என்று அமைச்சர் ரஞ்சன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27

கொழும்பில் நேற்று இந்திய விரோத வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்திய நிறுவனங்கள் பலவற்றின் மீது கிரனேட் குண்டுகள் வீசித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பல இடங்களில் இடம்பெற்றன.

குண்டு வீச்சுச் சம்பவங்களின் காரணமாகவும், பகிஷ்கரிப்பு நடவடிக்கை காரணமாகவும் நேற்று வங்கிகள், அலுவலகங்கள் இயங்கவில்லை. நகரம் அனேகமாகச் செயலிழந்து காணப்பட்டது.

கொழும்பில் பல இடங்களில் நேற்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பம்பலப்பிட்டியில் உள்ள இந்திய வர்த்தக நிலையம், கோட்டையில் உள்ள ஸ்டேட் பாங் ஒப் இந்தியா ஆகியவற்றின் மீது கிரனேட் குண்டுகள் வீசித் தாக்கப்பட்டன.

இரண்டு கிரனேட்டுக்கள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிலக்கண்ணி வெடி! 18 ஜவான்கள் பலி!!

### முள்ளிப்பொத்தானையில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 27

திருகோணமலை, முள்ளிப்பொத்தானைக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றநிலக்கண்ணி வெடித் தாக்குதலில்18 இந்திய ஜவான்கள் உயிரிழந்தனர், மேலும் மூன்று ஜவான்கள் காயமடைந்தனர்.

ரோந்து சென்ற வாகனம் ஒன்று நிலக்கண்ணியில் சிக்கிச் சிதறியது.

அப்போதே 18 ஜவான்களும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ)

### தொலைபேசித் தொடர்பும் தடுப்பா?

வடபகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டுவிட்டது போலவே, தொலைபேசித் தொடர்பும் தடுக்கப்பட்டு விட்டதா?

கொழும்புக்கும்— யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தொலைத்தொடர்பு நேற்று முற்றாகத் தடைப்பட்டது.

இந்தத் துண்டிப்பு இயற்கையாகவே உண்டான தொழில் நுட்பக் கோளாறு அல்லது மின்சாரத் தடை போன்ற சதிவேலையா என்பதைச் சரிவர ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (அ)

### சுபநேரம்

27—07—1989

ஆடி 12— வியாழக்கிழமை நக்ஷத்திரம்: கார்த்திகை சுபநேரம்:

07.32 முதல் 09.02 வரை ராகுகாலம்:

10.32 முதல் 03.02 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### பல்கலைக்கழக மாணவனை விடுவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறை இரண்டாம் வருட மாணவன் எம். இளம்பிறையன் செவ்வாய்க்கிழமை மாலை அவரது வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என பல்கலைக் கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

இவரை விடுவிக்கும் முயற்சியில் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு ஈடுபட்டுள்ளது.

### பதுளையில் 3 இராணுவ வீரர் பலி!

கொழும்பு, ஜூலை 27

பதுளையில் நேற்று தீவிரவாதிகள் மறைந்திருந்து இராணுவ ஜீப் மீது நடத்திய தாக்குதலில மூன்றுவீரர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு பொதுமகன் படுகாயமடைந்தார். (இ-எ)

### ஷெல் வீச்சில் 7பேர் காயம்

மாங்குளம், ஜூலை 27

கடந்த செவ்வாய்க்கிழமை முள்ளியவளைப் பகுதியில் அமைதிப் படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது ஷெல் வீச்சும் இடம்பெற்றது

கறுப்புக்கேணியில் ... வீடு ஒன்றில் ஷெல் விழுந்ததை அடுத்து ஒரு குடும்பத்தில் ஏழு பேர் காயமடைந்தனர். (இ-34)

### மரணம்

சங்கானை, தொட்டிலடியில் நேற்று நண்பகல் 1-15 மணியளவில் மோட்டார் சைக்கிளும், லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

தொட்டிலடியைச் சேர்ந்த கா. கனகரத்தினம் (வயது55) என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ)

## தென்பகுதி நிலைமைக்கு இலங்கை அரசே காரணம்

### ராஜ்ய சபாவில் நட்வர்சிங் தகவல்

புதுடில்லி, ஜூலை 27

இலங்கையின் தென் பகுதியில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து இருப்பதற்கு அந்த அரசே காரணம் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ராஜ்யசபாவில் நேற்று இத்தகவலை வெளியுறவு இணை அமைச்சர் கே. நட்வர்சிங் எழுத்துமூலமானபதிலில்வெளியிட்டார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இந்திய அமைதிப்படையே காரணம் என்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடைசிக் கடிதத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அது குறித்து உறுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் நேற்று டிரக் - சைக்கிள் விபத்து!

### தந்தை மரணம்; மகன் காயம்!!

யாழ்ப்பாணம், ஜூலை 27

திருநெல்வேலியில் நேற்றுக் காலை தந்தையும், மகனும் சென்ற சைக்கிளும் படையினரின் டிரக் ஒன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் தந்தை அந்த இடத்திலேயே மரணமானார். மகன் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொலையுண்டவர் கொக்குவில் தெற்கைச் சேர்ந்த கே. துரைராஜா (வயது 52) என்பவராவார்.

இவர் திருகோணமலை விவசாய சேவைப் பகுதியில் தட்டெழுத்தாளராகக் கடமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியக்காரருக்கான கொடுப்பனவுகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஓய்வூதியக்காரருக்குரிய கொடுப்பனவு இன்று முதல் வங்கிகள் மூலம் வழங்கப்பட இருக்கிறது.

ஒரு வாரத்துக்கு முன் ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ் அரசாங்க செயலகத்தால் அனுப்பப்பட்டிருந்தன.

ஆனால் ஓய்வூதியத்துக்கான பணம் வங்கிகளுக்கு வந்து சேராததால் பணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

யாழ் அரசாங்க செயலகம் நேற்று வங்கிஉத்தரவை வங்கிகளுக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இன்று பணம் வழங்கப்பட இருப்பதாக அறியவந்தது. (இ-19-3)

### கொழும்பில் நடைபெற இருந்த சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டது

புதுடில்லி, ஜூலை 27

சார்க் நாடுகள் தலைவர்களின் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இந்த மாநாடு நவம்பர் முதல் வாரத்தில் கொழும்பில் நடைபெறவிருந்தது.

அமைதிப்படை விலகல் தொடர்பான பிரச்சினை குறித்து பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை இலங்கை பகிஷ்கரித்தது.

அமைதிப்படை ஜூலை 29க்கு முன்னர் விலகாது விட்டால் நவம்பரில் கொழும்பில் சார்க் உச்சி மாநாட்டை நடத்தப்போவது இல்லை என்று ஜனாதிபதி பிரேமதாசா ஏற்கனவே தெரிவித்து இருந்தார். (இ)

## பிரேமதாசாவின் செய்தி பாக். அமைச்சர் மூலம் ராஜீவிடம்

புதுடில்லி, ஜூலை27

ஜனாதிபதி பிரேமதாசாவின் செய்தி ஒன்றை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தெரிவித்தார் என்று நம்பப்படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தீவிரமடைந்து வரும் நெருக்கடியை தவிர்க்க ஒரு வழியைக்கூறுவதாக ஜனாதிபதியின் செய்தி அமைந்திருப்பதாக புதுடில்லி வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வாய் மூலமான இச் செய்தியில் பிரதமர் திரு. காந்திக்கு ஜூலை19தில் தான்எழுதிய கடிதத்தில்கூறியிருந்தவற்றையே திரு. பிரேமதாசா மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார் என்று தெரியவருகிறது.

ஜூலை 19 கடிதத்தில் திரு. பிரேமதாசா அமைதிப்படையினரை வாபஸ் வாங்குவதை புதுடில்லி ஆரம்பித்தால் பூரணமாக வாபஸ் வாங்குவது பற்றிய கால அட்டவணையை தயாரிப்பது பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று தெரிவித்து இருந்தார்.

அமைதிப்படை விலகலுக்கும் அதிகாரபரவலாக்கலுக்கும் தொடர்பு இல்லை என்ற நிலைப்பாட்டை திரு. பிரேமதாசா கைவிட்டுவிட்டாரா என்பது குறித்து பாகிஸ்தான் அமைச்சர் ஊடாக வாய்மொழி மூலம் அனுப்பப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதா? என்பது ஊர்ஜிதம் செய்யப்பட முடியாதிருப்பதாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரப்பாவலாக்கலும் அமைதிப்படை விலகலும் ஒரே சமயத்தில் இடம்பெற வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது. (இ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

V. M. S. R. Hen Farm புரொயிலர் பேட்டுக் கோழிகள் விருத்துக் குஞ்சுகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒரு நாள் புரொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகளை பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். No. 36, பலாலி றோட், கந்தர் மடம், இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம். (11617)

புரொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குஉண்டு. தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. தொடர்பு 39/5, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம். (11616)

National G 1 (Genlaok) வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். (11622)

க. பொ. த உயர்தர பரீட்சைக்கான உயர்தரக் கணக்கியல் செய்முறைப் பயிற்சி கம்பனிப் பகுதிகள் உள் அடக்கியது. சி யோகேஸ்வரன். கிடைக்குமிடங்கள், ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் (1303)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள கந்தையா வீதியில் அமைந்துள்ள உறுதி பிரச்சினையற்ற வீட்டுக்கான அத்திவாரத்துடன் கூடிய 4 பரப்பும் 2 குழியுமுள்ள காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி T. V. ஐயாத்துரை 'ஞானபதி' கந்தையா வீதி, சாவகச்சேரி, கொழும்பில் தொடர்பு: R முத்துக்குமாரசுவாமி, 30, எலிபாங்றோட், ஹவ்லொக் டவுண், பம்பலப்பிட்டி. (1323)

## கோழிக் குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை சுறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052

## தேவை

உணவு பரிமாறுபவர்கள் (Stewards) தேவை. நேரில் வரவும்: Old Park Chinese Restaurant, 207, Old Park Road, Jaffna. [1321]

## மணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் உத்தியோகத்திலும் மணமக்கள் இருக்கின்றார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (11600)

## யாருடையது

யாழ் ஆஸ்பத்திரி கன்ரீனில் கண்டெடுக்கப்பட்ட தாலி ஒன்று முகாமையாளர் க. பிறைகுடியிடம் உள்ளது உரியவர் அடையாளங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம். (11621)

## Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப் பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

---

உ
சிவமயம்

# நன்றி நவிலல்

கடந்த 09-07-1989 (ஞாயிற்றுக்கிழமை) காலை கட்டைப்பிராய் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நிறைவு பெற்ற எமது திருமண வைபவத்திற்கு நேரில் வருகை தந்து, ஆசீர்வதித்தும், வாழ்த்துக்கள் வழங்கியும் அன்பளிப்புகள் வழங்கியும் மற்றும் தபால் மூலம், பத்திரிகைமூலம் வாழ்த்துக்கள் அனுப்பியும் அன்பளிப்புகள் அனுப்பியும் எம்மை மகிழ்வித்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
நன்றியுடன்

இ. இரவீந்திரகுமாரன் (ரவி)
இ. சந்திரகுமாரி (சந்திரா)

கட்டைப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (11624)

---

# ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்

## கந்தையா துரைராஜசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

மலர்வு: 22 - 11 - 1920    உதிர்வு: 06 - 08 - 1988

திதி: 27 - 07 - 1989

சிவபதம் எய்திய எம் அன்புத்தெய்வமே ஐயா!
எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய்
எமது இல்லக் குலவிளக்காய்
எந்நாளும் எம்முடன் இணைந்திருக்கும்
எம் அன்புத் தந்தையே!
எங்களுடன் கூடி விளையாடும் அன்புத் தாத்தாவே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஒருவருடமாகின்றது
எத்தனை வருடமானாலும் உங்கள் நினைவு
எம்மைவிட்டு அகலாது;
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்!

உங்கள் பிரிவால் தவிக்கும்
மனைவி (அகிலநாயகி), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

புகையிரத வீதி,
தெல்லிப்பளை (11626)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி தவமணி அப்பையா

தோற்றம்: 20 - 03 - 1929    மறைவு: 07 - 08 - 1988

திதி: 27 — 07 — 1989

அம்மா நீங்கள் மறைந்து ஒருவருடம் ஓடிவிட்டதே! இன்னமும், ஆறவில்லை எங்கள் மனம். ஓயவில்லை எங்கள் கண்ணீர். எமது குடும்பத்தில் ஒளி விளக்காய் வழி நடத்திய அன்புத் தாயே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 1, புதியசெம்மணி வீதி,
கல்வியங்காடு.

---

# Y. W. C. A HOSTEL

Hostel accomodation available for students and working girls from 10 th August at 41, 4th Cross street, Jaffna. Application forms are available at Y. W. C. A. Office, 99, Chapel Street, Jaffna.

# விடுதி வாய்ப்பு

பெண்கள் கிறிஸ்தவ மகளிர் சங்கம்

பாடசாலை மாணவியருக்கும், பணியாற்றும் மகளிருக்கும் 41, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 10-08-1989 தொடக்கம் விடுதி வசதி உண்டு.

விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

வை. டபிள்யூ. சி. ஏ. அலுவலகம்
99, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3081)

---

# ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



## திமோத்தின் மரியதாஸ்

(மரி)

தோற்றம்: 13- 11 1961    மறைவு: 27- 07- 1988

ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயரம் அழுது புலம்புகின்றோம் மரியே என்று வருவாய் கண்ணீரால் தீபமிட்டு கல்லறைக்கு கதைகள் சொன்னோம். நிகழ்வுகளில் உன் மரணமும் நிழலாய்த் தொடர்ந்து விட்டது! உன் நினைவு மட்டும் நிகழ்வுகளில் நிதர்சனமாக.

உன் பிரிவால் துயருறும்;
தந்தை, சகோதர சகோதரிகள், மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள், உற்றார், உறவினர்.

21 3 ஆம் குறுக்குத் தெரு,
குருநகர்,
யாழ்ப்பாணம். (1165)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



## திரு. சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம்

தோற்றம்: 12-06 1918    மறைவு: 27 06-1989

எங்கள் குடும்ப குலவிளக்காய், திருவுருவாய், அன்புச்சுடராய், அன்பின் பிறப்பிடமாய் வாழ்ந்த அன்புத்தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் துயரில் பங்குகொண்டோருக்கும் மற்றும் பல்வேறு வகைகளால் உதவியவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். 27-07 1989 வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''முருகனருள் வாசம்''
மிருசுவில் வடக்கு,
[illegible] (1279)

---

# வெற்றிடம்

அச்சுக்கோர்ப்பாளர், இயந்திர இயக்குனர்.

அச்சுக்கோர்ப்பாளர் மற்றும் பிளேட்டன் சிலிண்டர் மெஷின்களுக்கு இயந்திர இயக்குனர்கள் தேவை. அலுவலக நேரத்தில் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

அருண் பதிப்பகம்
இல: 15, இரண்டாவது ஒழுங்கை
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2920)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## செந்திவேல் சக்திவேல்

(ஜோக்கின்)

பிறப்பு: 1965- 07- 17    இறப்பு: 1989- 06- 27

நிஜமாகிவிட்ட உனது பிரிவால் - இன்று
எமது இதயம் கூட இயங்க மறுக்கிறது
எங்கள் வீட்டு சோலைப்புஷ்பங்கள் கூட - உனது
சோக சரிதையையே சுரம் மீட்டுகின்றன
அன்று பன்னீரால் மொழிபேசிய எமது விழிகள் -
இன்று
கண்ணீரால் கதை பேசுகின்றன!
ஆனாலும் உனது லட்சியங்கள்...... - இன்னும்
திசை திரும்பிப் போய்விடவில்லை!
உனது லட்சியக் கனவுகள் நனவாகும்வரை - நாமும்
உன் வழி தொடருவோம்.

— உன்னை மறக்க முடியாதவர்கள்

வடமராட்சி (1290)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. தப்பு தங்கராசா

தோற்றம்: 03 12 - 1938    மறைவு: 06 - 07 - 1988

திதி 27. 07- 1989

பாசமுள்ள அப்பாவே!
எங்கள் குடும்பத்தை ஏற்றமுறச்செய்து, குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எமக்கு நல்வழிகாட்டி உழைப்பின் சிகரமாய் வாழ்ந்து, எங்களது உயர்வுக்கு வழிவகுத்தீர்களே! இனி நாங்கள் யாரை அப்பா என்று அழைப்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தனை செய்கின்றோம்.

உங்கள் அன்பான
மனைவி, பிள்ளைகள்.

இல. 44. விஸ்வமடு,
முல்லைத்தீவு. (11605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

**பொருள்:**
ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

உதயன்
உண்மை - விழிப்பு - துணிவு

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
27 - 07 - 1989 த. பெ: இல. 23

# இந்தியாவில் தேர்தல் முகம்

இந்திய நாடாளுமன்றத்தில் (லோகசபையில் இருந்து எதிர்க்கட்சி எம். பிக்கள் 74 பேர் கூட்டாக இராஜிநாமாச் செய்திருக்கிறார்கள். பன்னிரண்டு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 106 எம். பிக்களும் லோகசபையில் இருந்து விலகுவது என்ற முடிவின் விளைவு இது.

''போபர்ஸ்'' பீரங்கி விவகாரத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி ஊழல் புரிந்திருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கட்சி சார்பில்லாத, அரசியல் கலப்பில்லாத ''சிஏஜி'' என அழைக்கப்படும் கணக்காய்வாளர் நாயகப் பகுதியின் அறிக்கை இதனை ஊர்ஜிதம் செய்கிறது. எனவே அரசியல் ரீதியிலும், மானசீக முறையிலும் நாட்டை ஆளும் தகுதியை, உரிமையை பிரதமரும் அவரது அரசாங்கத்தினரும் இழந்து விட்டனர். ஆகையால் அரசாங்கத்தினரும், பிரதமரும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்தே, லோகசபையின் பதவிக்காலம் முடிவதற்கு ஐந்து மாதங்கள் முன்னதாகவே தமது பதவிகளைத் துறக்க எதிர்க்கட்சி எம். பிக்கள் முடிவு செய்தனர்.

இந்திய சுதந்திரத்தின் பின்னர், எதிர்க்கட்சி எம் பிக்கள் இந்தளவு அதிக எண்ணிக்கையில கூட்டாக இராஜினாமாச் செய்திருப்பது இதுவே முதல்முறை.

கடந்த சுமார் இரண்டு வருடங்களாகப் பெரும் சர்ச்சையைக் கிளப்பி வரும் ''போபர்ஸ்'' பீரங்கி விவகாரம், ஜெர்மன் (எச். டபிள்யு) நீர்மூழ்கி விவகாரம் என்பன இந்தியாவில் பெரும் அரசியல் புயலைத் தோற்றுவித்தன. ''போபர்ஸ்'' விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் பல தடவைகள் விவாதங்கள் நடந்தன. எனினும் ''சிஏஜி'' அறிக்கையை விவாதிக்க அரசு பின்னடித்தது. அதனைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் திடீரென கூட்டு இராஜினாமா முடிவை மேற்கொண்டன.

ராஜீவ் அரசுக்கு லோகசபையில் அதிகப் பெரும்பான்மை பலம் இருக்கிறது. அதனால் கூட்டு இராஜினாமாத் திட்டத்தில் கலந்து கொள்ளாத அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஜம்மு-கஷ்மீர் தேசிய காங்கிரஸ் ஆகிய இரண்டு எதிர்க்கட்சிகளையும் பெயருக்கு வைத்துக் கொண்டு டிசம்பர் வரை ராஜீவ் ஆட்சி நடத்துவாரா? அல்லது தமது அன்னையார் இந்திரா காந்தி செய்தது போல, எம். பிக்கள் பலத்தைப் பயன்படுத்தி ஆட்சிக் காலத்தை நீடிக்க முயற்சிப்பாரா? பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரம் வழங்கும் புதிய சட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற ''ஜெஸ்கர் யோஜனா'' திட்டம் என்பவற்றை முன்வைத்து, அக்டோபர் 31 ஆம் திகதி (இந்திரா கொலையுண்ட தினம்) தேர்தலை நடத்துவாரா? இப்படிப் பல கேள்விகள் இந்திய அரசியலில் எழுப்பப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சிகளின் முடிவு சரியானது என்று மக்களில் பெரும்பாலானோர் கருதுகிறார்கள். ராஜீவ் அரசு இராஜினாமாச் செய்து தேர்தலை நடத்த வேண்டும் என்பதை ஆதரிக்கிறார்கள்.

ஆனால் அரச அமைச்சர்களும், ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினர் ஜனநாயகத்தை அவமதித்துவிட்டார்கள் என்கிறார்கள். ''சிஏஜி'' அறிக்கையைப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேட முனைந்து நிற்கிறார்கள், இதனைப் பெரிதுபடுத்தி தேர்தலில் வெற்றிமுகம் காணலாம் என நினைக்கிறார்கள்; ஆந்திர முதல்வர் என். ரி. ராமராவும், முன்னாள் நிதி அமைச்சர் வி. பி. சிங்கும் தமது ஊழல்களை மறைக்க இப்படி ஒரு திரை போடுகிறார்கள்- இவ்வாறாக ஆளுங்கட்சியினர் சொல்கிறார்கள்.

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலம் மக்களிடம் அதிகாரம் என்ற பேரில் மாநில அரசுகளின் அதிகாரங்களை அரசு பறிக்க முயல்கிறது: தனது அதிகார பலத்தை மேலும் அதிகரித்து இப்போதுள்ள அரைச் சமஷ்டி அரசியல் முறையையும் அடித்து நொறுக்கப் பார்க்கிறது - இவ்வாறாக எதிர்க்கட்சிகள் கண்டிக்கின்றன.

வாதங்களும், விவாதங்களும் தேர்தல் களை கட்டப் போகிறது என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றனவோ!

எதுவாக இருந்தாலும் இந்தியாவில் காங்கிரஸ் கட்சிக்குப் பலமான ஓர் எதிர்க்கட்சி இல்லாதது பெரிய அரசியற் பற்றுக்குறை: உதிரிகள் கூட்டு எப்படியாகும் என்பது 1977 இன் மொரார்ஜி அரசில் பிரதிபலித்தது.

ஆகையால் சரியானது, தீர்க்கமானது, தவிர்க்க முடியாதது, நியாயமானது என்று வர்ணிக்கப்படும் கூட்டு இராஜினாமா நடவடிக்கை, நேரு - இந்திரா - ராஜீவ் என்ற குடும்ப அரசியல் செல்வாக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா? என்ற பென்னம்பெரும் கேள்வியும் உண்டு. அதற்கான பதிலைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# தொழிலாளர் வேலை நீக்கம்; மின்தடையே காரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ் மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் மின் தடை காரணமாக இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன: இதனால் அந்த நிறுவனங்கள் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து வருவதாக அறியவந்துள்ளது.

எண்ணெய் ஆலைகள், இரும்பு வேலைகள் செய்யும் தொழிலகங்கள் போன்ற பல தொழிலகங்கள் மின் தடையால் மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தொழிலாளர்களை தற்காலிகமாக வேலையில் இருந்து இடைநிறுத்தவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். (ஒ-3)

## யாழ். - காங்கேசன் ரயில்பாதை

# திருத்த வேலைகள் இடைநிறுத்தம்

### சிலீப்பர் கட்டைகள் வராததே காரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ் - காங்கேசன்துறை ரயில்பாதை திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வரை நடைபெறும் ரயில் சேவையை காங்கேசன்துறை வரை விஸ்தரிக்கும் நோக்குடன் ரயில் பாதை திருத்த வேலைகளை ரயில்வே பகுதி ஊழியர்கள் சுறுசுறுப்புடன் செய்து வந்தனர்:

கோண்டாவில் ரயில் நிலையம் வரை வேலைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் தற்போது வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன:

இவ்விடயம் தொடர்பாக ரயில்வேப்பகுதி அதிகாரிகளிடம் விசாரித்த சமயம், சிலீப்பர் கட்டைகள் வந்து சேராததாலேயே வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது; (இ-3)

# ஜீ.சி.ஈ. உயர் பரீட்சைக்கு $1\frac{1}{2}$ லட்சம் பேர் தோற்றுவர்

கொழும்பு, ஜூலை, 27
வருகிற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு ஒரு லட்சத்து 48 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்,

900 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை வருகிற ஆகஸ்ட் 19ஆம் திகதியில் இருந்து செப்டம்பர் 11 ஆம் திகதி வரை நடைபெறும். (ஒ-எ)

## நஷ்ட ஈடாக ரூபா 25 ஆயிரம்

வட்டக்கச்சி, ஜூலை 27
கிளிநொச்சி ஷெல் வீச்சில் மரணமடைந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும். இந்திய அமைதிப்படையினர் உடனடி உதவித் தொகையாக 25 ஆயிரம் ரூபாவை வழங்கினர்.

மரணமான ஆசிரியரின் மனைவிக்கு ரூபா 10 ஆயிரமும் காயமடைந்த அதிபருக்கு ரூபா 5 ஆயிரமும், காயம அடைந்த மற்றுமொருவரின் குடும்பத்துக்கு ரூபா பத்தாயிரமும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைத்து இந்த உதவித் தொகைகை யளிக்கப்பட்டது. (த-163)

### மட்டக்களப்பு

# டிப்போவில் 75 பஸ்கள்; 27 மட்டுமே சேவையில்!

மட்டக்களப்பு, ஜூலை 27
மட்டக்களப்பு போக்குவரத்துச்சபை டிப்போவில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக 75 பஸ்களில் 27 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன.

என்ஜின் இல்லாத நிலையில் 25 பஸ்களும் பற்றறி இல்லாமல் 39 பஸ்களும் உள்ளன.

மேலும் 252 பஸ்களுக்கு டயர், ரியூப், றிம், கவர் என்பன தேவைப்படுகின்றன:

இன்னும் வேறு உதிரிப்பாகங்கள் இன்றி மொத்தம் 48 பஸ்கள் ஓட முடியாமல் உள்ளன. (ச-21)

## 700 தாதிமார் நியமனம்

கொழும்பு, ஜூலை 27
தாதிமார் பயிற்சி முடிந்த 700 பேருக்கு வருகிறமாதம் முதலாம் திகதி தொடக்கம் அரசு ஆஸ்பத்திரிகளில் நியமனம் வழங்கப்பட உள்ளது.

இதன் பின்னர் ஆஸ்பத்திரிகளில் தற்சமயம் பணிபுரியும் பயிலுனர் தாதிகளுக்கு பயிற்சி வழங்கப்படும். (க-எ)

## ஐஸ் விலை அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 27
மின்தடை காரணமாக முல்லைத்தீவில் ஐஸ் தொழிற்சாலைகள் இயங்கவில்லை.

இதனால் மீனவர்கள் கொழும்பிலிருந்து வரும் ஐஸை இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. (த-92)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

கொழும்பு, ஜூலை 27
செல்வி துஷித்தா அரியரத்தினராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இந்து கலாசார அமைச்சர் திரு பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரி உயர்தர மாணவியான செல்வி துஷித்தா திரு. அரியரத்தினராஜா, கொழும்பு ராமநாதன் மகளிர் கல்லூரி சங்கீத ஆசிரியை திருமதி அ. மல்லிகா தம்பதிகளின் புதல்வியாவார்.

இவர் மதுரை கலாசேத்திராவில் டிப்ளோமா பட்டம் பெற்ற செல்வி பாலரஞ்சினி வாமதேவனின் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## கண்டி குண்டுவெடிப்பு ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூலை 27
கண்டியில் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம்— ஒன்றில் காயமடைந்தவர்களில் ஒருவர் செவ்வாயன்று மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ-உ)

# மாவைக் கந்தன் உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது

## இன்று திருக்கார்த்திகைத் திருவிழா

காங்கேசன்துறை, ஜூலை 27
மாவைக்கந்தன் உற்சவத்தில் இன்று 27 ஆம் திகதி திருக்கார்த்திகை உற்சவம் நடைபெறும்.

மாவைக்கந்தன் உற்சவம் இம்முறை அமைதியான முறையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தினமும் காலை 7 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகி மாலை 6.30 மணியுடன் பூர்த்தியடைகிறது.

ஏராளமான அடியார்கள் தினமும் வந்து வழிபாடு செய்கிறார்கள். ஆலய சுற்றாடலில் சிறு கடைகள், வர்த்தக நிலையங்கள் பல திறக்கப்பட்டுள்ளன; அடியார்களின் வசதிக்காக போக்குவரத்து சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆலய கிழக்கு வீதியில் உதவி அரச அதிபர் பணிமனை திறக்கப்பட்டு உற்சவ ஒழுங்குகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன:

தெல்லிப்பளை பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள், சாரணர்கள், அம்புலன்ஸ் படையினர் ஆகியோர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-68)

# றோட்டறிக் கழகத்தில் பெண்களும் சேரலாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27
றோட்டறிக் கழகங்களில் பெண்களும் அங்கத்தவர்களாகச் சேர வாய்ப்புக் கிடைத்துள்ளது:

சிக்காக்கோ நகரில் 1905 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட றோட்டறிக் கழகத்தில் பெண்கள் அங்கத்தவராகச் சேர இதுவரை வாய்ப்பு இருக்கவில்லை. ஆனாலும் அமெரிக்காவிலும், கனடாவிலும் பெண்கள் மேற்கொண்ட போராட்டத்தின் பயனாக அவ்விருநாட்டுப் பெண்கள் றோட்டறிக்கழகங்களில் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்பட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் சிங்கப்பூரில் நடந்த றோட்டறிக் கழகச் சர்வதேசப் பேராளர் மாநாட்டில், மற்ற நாடுகளுக்கும் மேற்கண்ட வசதி விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து றோட்டறிக்கழகத்தில் பெண்களை அங்கத்தவர்களாகச் சேர்க்கலாம் என்று ஏனைய நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக யாழ். றோட்டறிக் கழக வட்டாரத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, இதுவரை பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்றும், அப்படிக் கிடைத்தால் ஆவன செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது, (ஒ-3)

## நுவரெலியிலும் புயல் காற்று

கொழும்பு ஜூலை 27
நுவரெலியா மாவட்டத்திலும் நேற்று முன்தினம் புயல் காற்று வீசியது:

இதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் குறித்து ஊர்ஜிதமான தகவல்கள் இல்லை. உடைமைகள் சேதமடைந்தன.

அதிகளவிலான வீடுகள்சேதமுற்றன. மின்கம்பிகள் அறுந்து வீழ்ந்தன. (ஒ)

### யாழ். மாவட்டத்தில் தொலைக்கல்வி

# ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ் மாவட்டத்தில் 1989 - 91 ஆம் ஆண்டுக்கான தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் பின்வருமாறு:-

(இப்பெயர் விவரங்களின் ஒருபகுதி நேற்றைய உதயனில் வெளி வந்திருந்தது.)

செல்வி சி. விக்கினேஸ்வரன்-வல்வை மகளிர் வி, செல்வி சி. விஜித்தா - துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் த க பா, செல்வி கே செல்வநாயகி - சம்பர்மலை அ த க பா, செல்வி கே சுபத்திரா - கரணவாய் வேதாரணீஸ்வரா வி, திரு எஸ் செல்வராசா - அல்வாய் வடக்கு சிறிலங்கா வி. செல்வி எஸ் யோகேஸ்வரி - துன்னாலை தெற்கு அ த க பா, செல்வி எஸ் வாசுகி-கெருடாவில் இ த க பா.

திரு என் கைலைநாதன்- புங்குடுதீவு இராஜேஸ்வரி வி, செல்வி ஆர் விஜேநிதி- மிருசுவில் றோ க த க பா, திரு கே சிவலிங்கம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி திரு எஸ் பரமேஸ்வரன் கைதடி விக்னேஸ்வரா வி. செல்வி எஸ் சிவாஜினி - ஊறணி காவற்றுறை சென் மரியாள் றோ க பா;

செல்வி வி அருந்ததி வல்வை மகளிர் ம வி, செல்வி என் லோகினி - துன்னாலை தெற்கு அ த க பா, செல்வி வி சிவராணி-மூளாய் அ மி அ த க பா, செல்வி எம் தவமணி [illegible] வி, செல்வி எஸ் ராஜரெட்ணம் - வரணி [illegible] ஸ்ரீ புஷ்பராணி விஜாவில் சைவ வி. செல்வி எஸ் கமலராணி - குடத்தனை அ த பா;

செல்வி எஸ் கந்தையா - கரம்பைக்குறிச்சி அ த க பா, செல்வி வி ஸ்ரீவாணி- வேலணை தெற்கு ஐயனார் வி, திரு கே தங்கேஸ்வரன் — வரணி வடக்கு சிவப்பிரகாச வி, திரு ரி கௌரீநாதன் - கப்பூது ஏகாம்பர வி, செல்வி ரி வைத்திலிங்கம் - காரைநகர் அங்கி — அருணோதயா வி, செல்வி ரி வசந்தகுமாரி — வல்வை அ மி த க பா;

செல்வி வி வசந்தி - பொலிகண்டி இ த க பா, செல்வி ரி தேவராணி - வல்வெட்டி விநாயகர் வி, செல்வி எஸ் அரசரெட்ணம் - கம்பர்மலை அ த க பா, செல்வி எஸ் கனகசபை - கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி.

செல்வி எஸ் பவானி - வல்வை மகளிர் வி, திருமதி எஸ் யோகமணி — மாரீசன் கூடல் றோ க பா, திருமதி ஆர் ரதிவதனி - காரைநகர் யாழ்ரன் கல்லூரி, திரு: எம்: பாஸ்கரன் - கட்டைக்காடு றோ க த க பா, செல்வி எஸ் ராதை-வல்வை ம ம வி, செல்வி கே ஜெகதீஸ்வரி மிருசுவில் றோ க த க பா,

திரு. வி. ஜெயசேகரன்— பொலிகண்டி இ. த. க. ப.. செல்வி எஸ். சர்மிளா — தம்பட்டி அ த க பா, செல்விஎஸ், பொன்னம்பலம் — வறணி ம வி, திரு. ரி மோகனபாலன் —பிராம்பத்து கலைமகள் வி, செல்வி கே. சத்தியபாமா— சுழிபுரம் கூ சமாச பாடசாலை;

செல்வி ரி தயானந்தி— அல்வாய் வடக்கு றோ க த க பா, செல்வி எம் தனலட்சுமி —பொலிகண்டி இ த க பா, செல்வி எஸ் ராஜமணி- அல்வாய் சிறிலங்கா வி, திரு கே ரவீந்திரன் - கம்பர்மலை- அ த க பா, செல்வி பி இரத்தினமலர் — கற்கோவளம் மு ம த க பா, செல்வி என் லீலா— ஏழாலை ஸ்ரீ முருகன் வி, செல்வி எஸ். தமயந்தி ஏழாலை ஸ்ரீ முருகன் வி-

( தொடரும் )

# காங்கேசன் சிமெந்து ஆலையில் விநியோகம் சீராக நடைபெறுகிறது

காங்கேசன்துறை, ஜூலை 27
காங்கேசன் சிமெந்து ஆலையில் சிமெந்து விநியோகம் சீராகநடைபெற்று வருகிறது.

மின்தடை காரணமாக கடந்த பல நாட்களாக மேற்படி சிமெந்து ஆலைகளில் [illegible] பட்டிருந்தது. இருந்தபோதும் [illegible] பட்ட சிமெந்து பெரும் அளவில் இருப்பதால் சிமெந்து விநியோகம் தடையின்றி நடைபெற்று வருகிறது.

இருப்பில் வைக்கப்பட்டிருந்த சிமெந்தை தொழிற்சாலை ஜெனரேட்டர்களின் உதவியுடன் பைக்கற்றுகளில் அடைத்து விநியோகம் செய்யப்படுகிறது: (ஒ-68)

## வாசகர் திருமுகம்

### பாதையின் அவலம்

யாழ்ப்பாணம் - காரைநகர் '785' பாதையால் (அராலிவீதி) மக்கள் தலைகுனிந்து, கண்களை இறுகமூடி மூக்கைப் பொத்தியவண்ணம் செல்ல வேண்டியிருக்கிறது. நாவாந்துறைக்கு அண்மையில் காக்கைதீவில் இருக்கும் இடமே பயங்கரத் துர்நாற்றம் நிரந்தரமாக வீசும் இடமாக அமைந்திருக்கிறது.

இப்பாதையின் இருமருங்கிலும் சுமார் 50 மீட்டர் தூரத்துக்குப் பாதைக்கு மிக அருகில் குப்பை கூழங்கள், இறைச்சிக் கடைக் கழிவுகள் என்பன குவிந்து கிடக்கின்றன. அவ்வளவு பரந்த வெளியில் ஏன் பாதையின் அருகில் குப்பைகளைக் கொட்ட வேண்டும்?

தினமும் இப்பாதை வழியாகச் செல்லும் பாதசாரிகள், பஸ் பிரயாணிகள், சைக்கிள் பிரயாணிகள் ஆகியோரின் அவஸ்தையைத் தீர்க்க யார் முன் வருவர்?

பி. தவராசா
காரைநகர்

### கிராம சேவகர் இல்லை

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமசேவகர் பிரிவு 117 கட்டுவன் பிரிவுக்கு இரண்டு வருடங்களாக கிராம சேவகர் இல்லாது அவ்வூர் மக்கள் பெரிதும் கஷ்டத்திற்கு உள்ளாகி உள்ளார்கள். இப் பிரிவில் உள்ள மக்கள் பெரும்பாலானோர் குறைந்த கூலித் தொழிலாளர்களே.

எந்த வித நிவாரணக் கொடுப்பனவுகளும் இவர்களுக்கு சீராக கிடைப்பது இல்லை. பலநாட்கள் அலைந்தே அலுவல்களை செய்யக் கூடியதாக உள்ளது. இதனால் நாம் எமது உழைப்பை இழந்து கஷ்டத்திற்கு உள்ளாகிறோம்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவற்றைக் கவனத்தில் கொண்டு எமது குறையை நிவர்த்தி செய்வார்கள் என நம்புகிறோம்.

நலன்விரும்பி,
கட்டுவன்.

### புதிய அதிபர் யார்?

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தினதும் முல்லைத்தீவு கொத்தணியினதும் அதிபராகக் கடமையாற்றும் திரு: வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) விரைவில் பதவி உயர்வு பெற்றுச் செல்ல இருக்கின்றார்.

அவரின் இடத்துக்கு மகா வித்தியாலய அதிபராக தற்போதைய துணை அதிபரான திருமதி ம. பரமேஸ்வரனை நியமிக்க வேண்டும் என்று பாடசாலை அபிவிருத்தி சபையும் முல்லை. மாவட்டப் பிரஜைகள் குழுவும் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு சிபாரிசு செய்திருந்தன.

ஆனால் இதுபற்றி இன்னும் அபிவிருத்தி சபைக்குப் பதில் எதுவும் கிடைக்காதது ஏன் என்று தெரியவில்லை.

சு பொன்னுசுவாமி,
முல்லைத்தீவு.

# புதிய சமுதாயம் உருவாக இளைஞர் உழைக்க வேண்டும்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 27
பொழுது போக்குக்காக நூல் நிலையங்களில் பத்திரிகை, சஞ்சிகைகள், வாசிக்கும் இளைஞர்கள், யுவதிகள் தமது திறமைகளை வெளிக் கொணர தாம் கற்றவையை சிறார்களுக்கும் புகட்ட முன்வரவேண்டும். இப்பணியில் ஈடுபடுவதனால் தாம் வசிக்கும் பகுதியில் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கலாம்.

சாவகச்சேரி கச்சாய் வீதி வள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது நிலையத் தலைவர் திரு. க. நாகராசா மேற்கண்டவாறு கூறினார்;

தமது உரையில் அவர் சனசமூகநிலைய நிர்வாகிகள் தமது பணியுடன் கிராமத்திற்குப் பயன் தரக்கூடிய சேவைகளைச் செய்ய வேண்டும்: கிராமம் வளர்ச்சி பெறும் போது சகல மக்களும் முன்னேற வழிவகுக்கும் — என்றார்.

இக் கூட்டத்தில் திருவாளர்கள் சி பூமிசேகரன், வ. தங்கேஸ்வரன், சோ. முருகதாஸ், மு. சத்தியசீலன் உட்பட பலர் உரையாற்றினர். (ச-117)

## சிப்பாய் விடுதலை

கொழும்பு, ஜூலை 27
அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவைக் கொல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் மீது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர் ஜயக்கொடி சுபுல் ரஞ்சித் விடுதலையானார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமீர் இஸ்மாயில் இவரை விடுதலை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ புதிய உயர் கல்லூரி ★

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்

இவ்வாண்டுப் பரீட்சைக்கான வகுப்புக்கள் யாவும் ஆரம்பமாகி விட்டன.

— நிர்வாகி

(கி-3092)

ஸ்டைறேபோம் உற்பத்திகளை
(றிஜிபோம்)
நாம் தயாரிக்கின்றோம்

- மீன் பிடிக்க உதவும்
  மிதப்புக் கட்டைகள், ஷீட்டுக்கள்,
  மீன்கொண்டு செல்லும் பெட்டிகள்,
  ஐஸ்கிறீம் கொள்கலன்கள், பைப்,
  இன்சுலேஷன் மற்றும் பொதிகட்டும் பொருட்கள்

மற்றும்

பொலிபிளெக்ஸ் உற்பத்திகளும்
(ஆர்பிபோம்)

குஷன்கள், மெத்தைகள், ஷீட்டுக்கள், ஸ்பொன்ஜ்கள் மற்றும் மெத்தை போன்றவற்றைத் தயாரிக்க உதவும் பொருட்களுக்கும்

- சவர்ச்சிகரமான கழிவுகள் வழங்கப்படும்:

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு முகவர்கள் தேவை.

தொடர்பு கொள்க:

லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.,

49, கெய்சர் வீதி, கொழும்பு-11.
246, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
29/1, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 11.
(பீப்பிள்ஸ் பாரீச் கம்பிளெக்ஸ்)
தொலைபேசி: 421954, 530455

# கால்நடை வளர்ப்போர் கழகங்கள் கூட்டுறவு சங்கங்களாக பதியப்படும்

## கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

கால்நடை வளர்ப்போர் சங்கங்களைக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பதியும் வேலைகளை யாழ். கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கால்நடை அபிவிருத்திக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு கிடைத்துள்ள பெருமளவிலான பணத்தை சங்கங்களுக்கு வழங்குவதற்கு சட்டரீதியான, அமைப்பு ரீதியான சங்கங்களாக கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் மாற்றப்படவேண்டும் என்று கூட்டுறவுத் திணைக்களம் ஆலோசனை வழங்கியது.

இதைத்தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் சங்கங்களை கூட்டுறவுத் திணைக்களம் கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இச்சங்கங்களை சட்டவலுவுள்ளதாக பதிவுசெய்ய யாப்புகள் தயாரிக்கும் வேலைகளை கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஐ நித்தியராஜ் தெரிவித்தார்.

இது சம்பந்தமான விவரங்களை கூட்டுறவு உத்தியோகத்தர்களிடம் பெறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-3)

## சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 27

தெல்தெனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமைஇரவு இனந்தெரியாத நபர்களால் 3பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். (இ-எ)

## வட்டுக்கோட்டையில் பல் சிகிச்சைப் பிரிவு

பண்டத்தரிப்பு, ஜூலை 27

வட்டுக்கோட்டை கொட்டைக்காடு அரசினர் வைத்தியசாலையில் பல் சிகிச்சைப் பிரிவு ஒன்று ஆரபிக்கப்படவுள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் அ. செல்வராசாவின் முயற்சியால் இந்த நிலையம் அமைக்கப்படுகிறது.

யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் (க-120)

## ரூபா 2 கோடி நஷ்டம்

மட்டக்களப்பு, ஜூலை 27

ஹபரணையில் நாசகார சக்தியினால் சேதமாக்கப்பட்ட மின்சார ரான்ஸ்போமர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் 2 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (க-21)

# தித்தித்து இனிதூறும் தேன் திருவாசக அருமருந்து

## மணிவாசகர் குருபூசையில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 27

'தித்தித்து இனிதூறும் தேனுகிய திருவாசகம் கல்நெஞ்சையும் கரைய வைக்க வல்ல ஒன்றெனின் அது மிகையாகாது. சிகைக்கு மேல் உறுப்புக்கள் எதுவும் இல்லாததைப் போன்று, திருவாசகத்திற்கு மேற்பட்ட ஒருவாசகமும் இல்லை. சாத்திரங்களுள் தலைசிறந்தது சிவஞானபோதம், அறநூல்களில் தலையாயது திருக்குறள், இலக்கண நூல்களுள் முதன்மை பெற்றது தொல்காப்பியம். தோத்திரங்களுள் தலையாயது திருவாசகம் என்பதில் சந்தேகமேயில்லை.''

இவ்வாறு திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள கலா மன்றத்தில் நடைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையில் தலைமைச் சிறப்புரையாற்றிய மேற்படி மன்றத்தின் இந்து சமயப் பகுதித் தலைவர், ஆசிரியர் திரு. பரமநாதன் கூறினார்.

கலாமன்றப் பண்ணிசை வகுப்பு ஆசிரியர் திருப்பனந்தாள் தேவார இசைமணி, தாவடியூர் திரு. இரா. திருஞானசம்பந்தனும், மாணவிகளும் ''திருவாசக பாராயணம்'' நிகழ்த்தி விழாவைச் சிறப்பித்தனர்.

செல்விகள் கு. தர்சிகா, க. காஞ்சனு, இ. நிரஞ்சலா, செல்வன்கள் இ. மயிலைநாதன், சதா, திருஞானசம்பந்தன் ஆகியோர் இவ்விழாவில் சொற்பொழிவாற்றினர். (ச)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**நல்லூர் கந்தசுவாமி கோயில் 1989ஆம் ஆண்டு திருவிழாவுக்கான தற்காலிக சந்தைகளில்:**

(1) நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையில்,

(2) பண்டாரமாளிகை வளவில் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்திற்கு கிழக்குப் பக்கக் காணியில் கடைகளுக்கான நிலம், ஐஸ்கிறீம் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம்.

ஆகியன வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 02-08-89 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணிவரை யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள், கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 25/-வும் மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணைப் பணமாக ரூபா 250/- வும் செலுத்துவதன் பேரில் 31-07-89 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப் படிவங்களில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 02-08-89 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் நானுவித வருமானப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: மேற்படி விடயமாக 09-07-89 ஆம் திகதி உதயன், ஈழநாடு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. இது தொடர்பாக முன்பு சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் இரத்துச் செய்யப்படுகின்றன. முன்பு கேள்விப் பத்திரம் பெற்று கேள்வி சமர்ப்பித்தவர்கள் மீண்டும இலவசமாக கேள்விப்படிவங்கள் பெற்று கேள்வி சமர்ப்பிக்க வேண்டும்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24-07-89. [சி-2919]

"ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,384 |
| வைப்பு | 27,737,653 | 58,970,386 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வை நாடுங்கள்
நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணுரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.).
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.).
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் படை வெளியேறினால் யுத்தநிறுத்தம்; பிலிப்பீன்ஸ் கம். கெரில்லாக்கள் அறிவிப்பு!

மணிலா, ஜூலை 26
பிலிப்பீன்ஸில் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள கம்யூனிஸ்ட் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி மணிலா அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

சகல அமெரிக்கத் தளங்களும் பிலிப்பீன்ஸில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை

இதுபோன்ற நிபந்தனை ஒன்றை தலைமறைவாக இ...

### 20 ஆண்டு கால கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வர முயற்சி

...ந்து ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபடும் 13 இடதுசாரிக் கெரில்லாக்குழுக்கள் கடந்த ஏப்ரலிலும் கொரஸோன் அரசுக்கு விடுத்தது.

அதை ஜனாதிபதி கொரஸோன் நிராகரித்து விட்டார்.

கெரில்லாக்களின் ஆயுதப் போராட்டம் பிலிப்பீன்ஸில் கடந்த 20 ஆண்டுகளாக நடந்து வருகிறது

தினமும் 10 பேர் இப் போராட்டம் காரணமாகப் பிலிப்பீன்ஸில் உயிரிழந்து வருகின்றனர்.

அமைதிப் பேச்சுக்கள் நடத்த முன்வருமாறு பிலிப்பீன்ஸ் தேவாலய குழுக்கள் இருதரப்பினருக்கும் கடந்த வாரம் வேண்டுகோள் விடுத்திருந்தன

அதைத் தொடர்ந்தே 13 கெரில்லாக் குழுக்கள் அங்கம் வகிக்கும் தேசிய விடுதலை முன்னணி, அமெரிக்கத் தளங்கள் அகற்றப்பட்டால், ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்க சம்மதித்துள்ளன.

இதே வேளை—
நாட்டில் தொடர்ந்தும் அமெரிக்கத் தளங்களை வைத்திருப்பது சம்பந்தமான பேச்சுக்களை நடத்த வருகிற டிசம்பரில் திருமதி கொரஸோன் வாஷிங்டன் செல்லவிருக்கிறார். (எ)

### ஜோர்ஜியாவில் ஆர்ப்பாட்டம்

மாஸ்கோ, ஜூலை 26
மாஸ்கோவின் கட்டுப்பாட்டில் இருந்து பூரண சுதந்திரம் கோரி ஜோர்ஜியா மாநிலத்தில் நேற்று பெரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

சோவியத் யூனியனின் ஒரு மாநிலமாக 1921 இல் ஜோர்ஜியா இணைக்கப்பட்டது. (எ)

### அமைச்சர் பதவி நீக்கம்?

அம்மான், ஜூலை 26
பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தைக் கொல்ல வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறிய கைத்தொழில், வர்த்தக அமைச்சர் ஏரியல் ஷரோனை பதவி நீக்கம் செய்ய பிரதமர் ஷாமீர் தீர்மானித்து இருப்பதாக இஸ்ரவேல் வானொலி அறிவித்தது. (எ)

### நாணய சபையில் அங்கோலா!

வாஷிங்டன், ஜூலை 26
சர்வதேச நாணய நிதியத்தில் 152 ஆவது நாடாக அங்கோலா சேர்த்துக் கொள்ளப்பட்டது.

136 உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா மட்டுமே எதிர்த்து வாக்களித்தது. (எ)

# இந்தியாவில் இயற்கை அழிவு; இதுவரை 750 பேர் மரணம்!

புதுடில்லி, ஜூலை 26
கடும்மழை, வெள்ளம் மற்றும் புயற்காற்றுக் காரணமாக இந்தியாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 750ஐத் தாண்டி விட்டது என்று அறிவிக்கப்படுகிறது.

கர்னாடக மாநிலத்தில் மட்டும் 350 பேர் மரணமானார்கள்; மகாராஷ்டிர மாநிலத்தில் 150க்கு அதிகமானோர் உயிரிழந்தனர்.

இந்த இயற்கை அனர்த்தத்தினால் மட்டும் இந்தியாவில் தமிழ்நாடு, ஒரிஸ்ஸா, ஆந்திரா மாநிலங்களும் பாதிக்கப்பட்டன.

தமிழ்நாடு மாநிலத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்தது. (எ)

### வரவேற்பு

கெய்ரோ, ஜூலை 26
நான்கு ஆண்டுகால சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மத்தியஸ்த முயற்சியில் ஆபிரிக்க நாடுகள் ஈடுபடுவதை மொஸாம்பிக் ஜனாதிபதி சிஸ்ஸானோ வரவேற்றுள்ளார். (எ)

# சந்திரனில் விண்வெளி நிலையம் 'விடுதலை' எனப் பெயர் சூட்டல்

வாஷிங்டன், ஜூலை 26
சந்திரனில் நிறுவப்படவுள்ள நிரந்தர விண்வெளி நிலையத்துக்கு 'விடுதலை' (Feedom) என்று பெயர் சூட்டப்படும்.

விண்வெளி வீரர்கள் நிரந்தரமாகத் தங்கியிருந்து பணிபுரியவிருக்கும் இந்த நிலையம் 2,000 ஆவது ஆண்டிற்குப் பின்னர் நிறுவப்படும்.

இத்தகவல்களை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அண்மையில் வெளியிட்டார்.

திரு. புஷ் மேலும் சொன்னதாவது;
சூரியமண்டலத்தில் உள்ள கிரகங்களுக்கு மனிதனை அனுப்பி ஆராய்ச்சி நடத்தும் முயற்சியில் அமெரிக்கா தன்னை அர்ப்பணித்துள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா தான் தலைமை வகிக்கிறது.

சந்திரனில் மனிதனை இறக்கியதுடன் அமெரிக்காவின் விண்வெளிப்பணி முற்றுப்பெறவில்லை. அங்கு இருந்து நாம் தொடர்ந்து விண்ணை ஆராயவேண்டும்.

இந்த முறை சந்திரனுக்குப் போய் அங்கு தங்க உள்ளோம்.

இப்படி அதிபர் புஷ் சொன்னார். சந்திரனில் போய் இறங்கிச் சாதனை புரிந்த விண்வெளி வீரர்கள் அதிபரின் இருமருங்கிலும் அப்போது நின்று கொண்டிருந்தனர். (எ)

# கம்போடியப் பேச்சுக்களில் முட்டுக்கட்டை எனத் தகவல்

பாரிஸ், ஜூலை 26
பத்து ஆண்டு கால கம்போடியத் தகராறுக்கு தீர்வு காணும் பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

கம்போடியப் பிரதமர் ஹுன்சென் - புரட்சித் தலைவர் இளவரசர் சிஹானுக் ஆகியோருக்கு இடையே நேற்று பாரிஸில் நடந்த பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

4 மணித்தியாலங்கள் நடந்த பேச்சுக்களின்போது ஒரு விஷயத்தில் கூட உடன்பாடு காணப்படவில்லை என்று இளவரசர் நொரடோம் சிஹானுக் சொன்னார். (எ)

### நேபாள நிலைமை

காத்மண்டு, ஜூலை 26
தடை செய்யப்பட்ட நேபாள காங்கிரஸின் உயர்மட்டத் தலைவர்கள், சில எம்.பிக்கள் உட்பட நூற்றுக்கு அதிகமானோரை நேபாளப் பொலிஸார் கைது செய்தனர். (எ)

### அங்கீகாரம்

அமெரிக்க ஜனாதிபதியின் நட்சத்திரப் போர்த் திட்டத்தை செனட் சில நிபந்தனைகளுடன் அங்கீகரித்தது. (எ)


முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



(அல்வாய் வடக்கைச் சேர்ந்தவரும் முல்லைத்தீவில் இறந்தவருமான)
செல்வமாணிக்கம் திரவியநாதன்
மறைவு: 24 - 07 - 1988
திதி 27 - 07 - 1989

ஓராண்டு ஓடி மறைந்தாலும் இதயத்தால் நாங்கள் உங்களை என்றென்றும் மறவோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமகன், உறவினர்.
அல்வாய் வடக்கு, குமுதனி.
(C/3069)

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

| | | வெற்றிடம் | சம்பளம் |
|---|---|---|---|
| 1. | Mechanics (Disel, Petrol) (மெக்கானிக்) | — 2 | 900 SR |

ஒரு வாரத்தில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்

| | | வெற்றிடம் | சம்பளம் |
|---|---|---|---|
| 2. | Mechanics (மெக்கானிக்) | — 5 | 600 SR |
| 3. | Carpenters (தச்சுத் தொழிலாளி) | — 6 | 600 SR |
| 4. | Mesons (மேசன்) | — 5 | 600 SR |
| 5 | Plumbers (குழாய் வேலை செய்பவர்கள்) | — 7 | 650 SR |
| 6. | Painters (பூச்சு வேலை செய்பவர்கள்) | — 5 | 600 SR |
| 7. | Welders (வெல்டேர்ஸ்) | — 6 | 650 SR |

இவற்றிற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

'M' THREE TRAVEL

தலைமையலுவலகம்: 'இந்திரபவனம்' சோதி வீதி, காங்கேசன்துறை,

கிளையலுவலகம்: இல. 1,2 ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி-3098]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி லீலாவதி குகபாலன்
(ஆசிரியை உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)
பிறப்பு: 26 - 09 - 1947
பிரிவு: 06 - 08 - 1988

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை ஆழ்த்துயரில் தவிக்கவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே. உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

கணவன், தந்தை மாமி, சகோதரர், மைத்துனர், மருமக்கள்.
''பிரபா வாசம்'', உசன், மிருசுவில்.
(1287)

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

A/L 1989
கலை- வர்த்தக- விஞ்ஞான
பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள்
26 07-89 இல் இருந்து நடைபெறுகின்றன.
உடன் தொடர்பு கொள்ளவும்.
(C-3097]

25,000 ஆசிரியர் தெரிவுக்கான
போட்டிப் பரீட்சை

ஒகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்
(பல விரிவுரையாளர்களின் இணைந்த சேவை)
ஆரம்பம் 31 - 07 - 1989 (காலை 9 மணி)
பாடநெறி:- பொது அறிவு - பொது உளச்சார்பு

15 தினங்கள் தொடர்ச்சியான வகுப்புகள்

★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்.
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 250 00

விபரங்களுக்கு :- நேரில்
ASTAN INSTITUTE
101/10, Stanly Road, JAFFNA.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
[சி 3100]

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




முத்துக்குமாரு ஸ்ரீகுமார்
(ராசாண்ணை)
மலர்வு: 29 - 07 - 1946
உதிர்வு: 27 - 07 - 1983

வெலிக்கடை சிறையில் செந்நீர் சிந்தி நீ மண்ணில் உதிர்ந்து
நாம் கண்ணீர்க் கடலிலே மிதந்த நாளினைக்
காலம் மாறினும் எமதுள்ளம் மறக்குமோ?
ஆறுவருடங்கள் ஆனபின்பும் எம்
சித்தம் கலங்குதுன் பிரிவை எண்ணி!

உன் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், அம்மா,
சகோதரர்கள், மாமி, மைத்துனிமார்.
(1284)

புரோட்டீன் நிறைந்த
புரோட்டினெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your Friends in Finance

SHABRA

61, New Bullers Road,
Colombo - 6.

# உதயன்

27 07 1989 வியாழக்கிழமை

நிதித்துறையில்

நாணயம்மிக்க நண்பன்

"ஷப்ரு"

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## சுதுமலையில் ஒருவர் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 27

சுதுமலையில் நேற்று மாலையில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுதுமலையைச் சேர்ந்த கே. துரைராஜா (வயது 53) என்பவரே மரணமானவராவார்.

(இ-9)

## முகாம் அகற்றப்பட்டது

வட்டக்கச்சி, ஜூலை 27

இராமநாதபுரம் பாடசாலை முன்பாக நீண்டகாலமாக இந்தியப் படையினரால் அமைக்கப்பட்டிருந்த முகாம் 24ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அகற்றப்பட்டுள்ளது.

(இ-163)

## ஈ. பி. ஆர். எல். எப்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் வெளியிட்ட தகவலில், இலங்கைஇராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்த 3பேர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்புப் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. கிளிநொச்சி சம்பவம் ஆள் மாறாட்டம் காரணமாக ஏற்பட்டது என்று இலங்கை அரசு அதிகாரி ஒருவர் சொன்னதாக இந்தியத் தரப்பு மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் கிளிநொச்சியில் நேற்றும் தொடர்ந்து துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-10-163)

## திருநெல்வேலி--:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றி இளைப்பாறி, பின்னர் மருதனாமடம் கிருஸ்தவ நிலையத்தில் கடமையாற்றி வந்தார்.

இவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு மரண விசாரணை இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த துரைராஜா சத்தியசிலன் (17 வயது) யாழ் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

(ஒ-3-10)

## 4ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் பாலராஜ் (ராஜா)

பாலசிங்கம் தங்கலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் பாலராஜ் இன்று தனது நான்காவது பிறந்தநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை கனடாவில் இருக்கும் அப்பா, அம்மா, குட்டி அக்கா, அண்ணன்மார் மற்றும் ஊர், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(11632)

## வடமராட்சித் தாக்குதலில்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யடியில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

### இறந்தோர்

நேற்றுக் காலை இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது இறந்தவர்களின் விபரம் வருமாறு:-

செல்வன் நா. கேதீஸ்வரன் (புலோலி ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர் வயது19)

திரு. கே. அம்பலவாணர் (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய விஞ்ஞான கணித உதவி யாசிரியர் வயது 36).

திரு. எஸ். வயிரமுத்து (புலோலி மரணவிசாரணை அதிகாரி வயது 55).

திரு.எஸ். சுப்பிரமணியம்(மந்திகை அரசினர் வைத்தியசாலை எழுதுவினைஞர் வயது 50):

திரு. க. குலசிங்கம் (வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடத்துநர் வயது 25).

திரு. ஆர். ஸ்ரீ பத்மநாதன் (மெக்கானிக், வட பிராந்திய போக்குவரத்துச் சபை வயது 20).

செல்வன் பரமகுரு ஸ்கந்தகுமார் (ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன் புலோலி கிராமக்கோட்டடி வயது 19)

திரு. வி. கணேசநாதன் (புலோலி கிராமக் கோட்டடி, வயது 25).

திரு. எஸ். பாக்கியநாதன் (திருமலையைச் சேர்ந்தவர், மூன்று பிள்ளைகளின் தந்தை, வயது 40).

திரு. எஸ். சிவலிங்கம் (துன்னாலை அல்லையம்பதியைச்சேர்ந்தவர், வயது 45).

மாதனையைச்சேர்ந்த அடையாளம் தெரியாத மூதாட்டி ஒருவர் கிராமக்கோட்டடியில் உள்ள மருதங்கேணி வீதியில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இதுவரை இவரின் சடலம் உரிமைகோரப்படவில்லை.

திரு. எஸ். அப்பன் [நாலாம் குறுக்குத் தெரு):

### காயமுற்றோர்

மேலும் ஷெல் அடியினாலும் துப்பாக்கிச் சூட்டினாலும் காயப்பட்டோர் விபரம் பின் வருமாறு:-

எஸ் ஸ்ரீகிருபாகரன்(புலோலி வயது 16).

திரு. எஸ். செல்லத்துரை (விஞ்ஞான கல்வி அதிகாரி, புற்றளை, வயது 56).

திரு. தா. தயாளன் (புலோலி கிராமக் கோட்டடி வயது34).

திரு. பொ. இரத்தினசிங்கம் (ஸ்ரீஸ்கபே, பருத்தித்துறை. வயது 62).

திரு. வி. சேதுநாயகம் (தும்பளை கிராம சேவையாளர், வயது 55).

செல்வி பஞ்சாட்சரம் வதனி (வயது 9. ஐயனார் கலட்டி)

17 செல்வன் எஸ். மூர்த்தி (வயது 19 புலோலி).

### எரியுண்ட கடைகள்

நேற்றைய சம்பவங்களில் ரதிஸ்ரோர்ஸ், வேலவன் ஸ்ரோர்ஸ், அம்பாள் ஸ்ரோர்ஸ், குமாரவேல் மருந்துக்கடை, ராணி ஸ்ரோஸின் களஞ்சியம் அமைந்த வீடு ஆகியன முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளதாகத் தெரியவந்தது.

அத்துடன் 'என்னென்கோ' சைக்கிள்கடை, அதற்கு அருகிலுள்ள லோன்றி என்பன உடைக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

### துன்னாலையில்

இதேவேளையில் துன்னாலையில் அல்லையம்பதி என்னுமிடத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொலையுண்டனர்.

சாந்தினி (20 வயது), தாயார் ச. தங்கம்மா (45 வயது), பேத்தியார் (75 வயது) ஆகியோரே கொலையுண்டவர்கள் ஆவர். இவர்கள் மூவரினதும் சடலங்களும் நேற்றுக்காலை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும், அப்போது காரைநோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுறது. அதனால் காரின் சாரதி உட்பட நால்வர் காயங்களுக்குள்ளானார்கள்

ப. தியாகராசா, சந்திரகுமார், வெ. சுப்பிரமணியம், ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இதேவேளை புற்றளையில் நடந்த சம்பவம் ஒன்றில் எஸ். சிவலிங்கம் என்பவர் பலியானார்.

மூன்று சடலங்களும் காரும் சேர்த்து எரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

### பிரெஞ்சு டாக்டர்கள்

நேற்றைய சம்பவங்களில் காயம் அடைந்தவர்களையும் இறந்தவர்களையும் ஏற்றிச் செல்ல தனியார் வாகனங்கள் தயங்கின.

மந்திகை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பிரெஞ்சு டாக்டர்குழு தமது பிக்அப் வாகனத்தைக் கொடுத்து உதவியது.

(அ)

## இந்திய நிறுவனங்கள் மீது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீதும் 3 கிரனேட்டுக்கள் ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா கட்டடம் மீதும் வீசப்பட்டன.

வாகனம் ஒன்றில் வந்தவர்களே இத் தாக்குதலை நடத்தினர்.

ஓவர்சீஸ் வங்கியைச் சேர்ந்த பெண் ஊழியர் ஒருவரும் ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா பாதுகாப்பு ஊழியர் ஒருவரும் அப்போது காயமடைந்தனர்.

சில இடங்களில் இந்திய அரசு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிக்கொண்டு பலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். பொலீஸார் அவர்களைக் கலைத்தனர்.

### பகிஷ்கரிப்பு

கொழும்பில் நேற்று அனைத்து அரச அலுவலகங்களும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டன.

ஜூலை 29ஆம் திகதிக்கு முன்னர் அமைதிப் படையினர் வெளியேறவேண்டும் எனக் கோரி சகல அரச அலுவலகங்களையும் பகிஷ்கரிக்குமாறு ஜே வி.பியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனை அடுத்து நேற்று அரச அலுவலகங்களுக்கு கடமைக்கு வந்த உத்தியோகத்தர்கள் கையெழுத்து போட்டுவிட்டு வெளிநடப்புச் செய்தனராம்.

29 ஆம் திகதி வரை அரச அலுவலகங்களை பகிஷ்கரிக்குமாறும்—

29 ஆம் திகதிக்குள் அமைதிப் படையினர் வெளியேறுவிட்டால் ஜே வி. பியின் இந்த நடவடிக்கை மேலும் விஸ்தரிக்கப்படும் எனவும் — கொழும்பில் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர் குற்றச்சாட்டு

இதே வேளை—

அமைதிப்படை விலகல் விவகாரத்தைப் பயன்படுத்தி சட்டபூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுள்ளன என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின குற்றஞ் சாட்டினார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சில சக்திகளின் நடவடிக்கைகள் பற்றி எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இம் முயற்சியை முறியடிக்கும் நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. இது சம்பந்தமாக கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும்படி பாதுகாப்புப் படையினர் பணிக்கப்பட்டுள்ளனர் — இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

(அ-எ-10)

## தென்பகுதி ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பினர் ஒருவர் எழுத்து மூலமாக கேட்ட கேள்விக்கு இணை அமைச்சர் எழுத்து மூலமாக அளித்த பதில் நேற்று ராஜ்ய சபாவில் சமர்ப்பிக்கப்பட்டது.

அப் பதிலில் இணை அமைச்சர்,

''இலங்கை அரசின் தவறான செயல்களும் அணுகுமுறைகளும்தான் தென் பகுதியில் சட்டம், ஒழுங்கு சீர்குலையக் காரணம்.

''இந்தியாதான் இதற்குக் காரணம் என்று ஜனாதிபதி பிரேமதாஸ குற்றஞ் சாட்டி இருப்பது மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது'' —என்று தெரிவித்தார்.

## முல்லைத்தீவு பகுதியில்

மாங்குளம், ஜூலை 27

முல்லைத்தீவுப் பகுதியில் சில முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

மன்னகண்டல், முல்லைத்தீவு வீதி 2 ஆம் கட்டை, காட்டுவிநாயகர், வெளிக்குளம் ஆகிய பகுதியில் உள்ள இந்திய இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன, (இ-94)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு கனகரத்தினம்

''குமாரிவாசம்'' சங்கானை, தொட்டிலடியைச் சேர்ந்த கார்த்திகேசு கனகரத்தினம் (26-07-89)-இல் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற போர்னியோ கார்த்திகேசு, திருமதி கார்த்திகேசு சேதுப்பிள்ளையின் அருமை மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவனும், திருமதி சிவப்பிரகாசம், ஏகாம்பரம் (M. L. T.), சண்முகநாதன் (ஓமான்), சகாதேவன் (கனடா) ஆகியோரின் சகோதரரும், தியாகராஜா (ஜேர்மனி) மைத்துனரும், லோகநாதன் (லெபனன்), இராமநாதன் (ஜேர்மனி), ரங்கநாதன் (ஜேர்மனி), வசந்தகுமாரி (கனடா), விஜயகுமாரி, நாகநாதன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், உருத்திரமூர்த்தி (கனடா), சூரியலலிதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், சுலக்ஷன் (கனடா) சுகிர்தனு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக (27-07-89) இன்று பகல் 12-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

''குமாரி வாசம்''
தொட்டிலடி.
சங்கானை.

தகவல் :
கா. ஏகாம்பரம்

(11634)

### ஜேமிஸ் அந்தோனிப்பிள்ளை

குருசோவீதி சுண்டிக்குளியைச் சேர்ந்த ஜேமிஸ் அந்தோனிப்பிள்ளை 24-7-89இல் அகாலமரணம் அடைந்தார். இவர் புதுமடம் மானிப்பாய் தபால்அதிபரும், அ. லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும், சபாதயன், றமிஞ்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனுருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் புதுமடம் கத்தர்கோயில் மானிப்பாயில் 27—7—89 இன்று வியாழன் காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

புதுமடம்
கத்தர்கோயில்,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி, மக்கள்

(7459)

### கறுத்தான் ஐயன்

நயினாதீவை வசிப்பிடமாகக்கொண்ட கறுத்தான் ஐயன் சுகாதாரப்பகுதியில் கடமையாற்றி ஓய்வு பெற்று 26-7-89 இல் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 27 - 07 - 89 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கைதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சாந்தி நிலையம்,
கைதடி.

தகவல்!
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(1291)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா பேரின்பநாயகம்

நாரந்தனை திருமதி நல்லம்மா பேரின்பநாயகம் 23-07-89 இல் ஜேர்மனியில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற பேரின்பநாயகம் அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற தனபாலன், சரோஜனிதேவி, சபாநாயகம் (ஜேர்மனி), யோகநாயகம் (ஜேர்மனி), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தவநாயகம், பரமேஸ்வரி, சிவகுமாரி (ஜேர்மனி), எமிலி (ஜேர்மனி) கணேசமூர்த்தி (சுவிச்சர்லாந்து), ஆகியோரின் மாமியாரும் கந்தஞானி, சிவஞானம், இராசம்மா, காலஞ்சென்ற தங்கம்மா, அமிர்தம், ஞானசவுந்தரியம்மா ஆகியோரின் சகோதரியும் புனிதவதி, செல்லம்மா, காலஞ்சென்ற ஆறுமுகம், செல்லப்பா, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, காராளசிங்கம் என்பவர்களின் மைத்துனியும் ஆவார்,

தகனக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் சொள்கின்றோம்.

நாரந்தனை,
ஊர்காவற்றுறை.

தகவல், நா. கந்தஞானி

(1283)

### திருமதி யோகவதி நவரெட்ணம்

திருமதி யோகவதி நவரெட்ணம் காலமாகி விட்டார். அன்னார் வண்ணார்பண்ணை வடகிழக்கு இல 220, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்தவரும், டாக்டர் சி. நவரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், விஜயலெட்சுமி யோகேந்திரா, மனோரதி, ரவீந்திரன், பக்தியேந்திரா, இந்திரராஜ் ஆகியோரின் தாயாரும் மகேஸ்வரன் (லண்டன்), இரத்தினசிங்கம் (இலங்கை வங்கி), சிவகுமார் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ், கௌரி, பிரகாஷ், நிரஞ்சன், நிரோஷா, நிர்மலா, லோகசங்கர், டங்கன், நிர்மலன், அரவிந்தன், மலர்விழி, சர்மிலன், ஹேமிலன், பிரேமினி, சமித்திரா, ஆகியோரின் அன்புப் பேத்தியும் சக்தியேந்திரா, பாலேந்திரா, ஆகியோரின் சிறிய தாயும், காலஞ்சென்ற முத்துச்சுவாமி செல்லம்மாவின் மகளும், சின்னத்தம்பியின் மருமகளும், பத்மாவதி, லீலாவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார் அன்னாரின் தகனக்கிரியைகள் 26/ 07/ 89 அன்று கோம்பயன் மயானத்தில் நடைபெற்றது உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:

(1292)

கணவன், மக்கள், மருமக் ள்.

### அன்றூ டானியல் ஜெபறட்ணசிங்கம்

அன்றூ டானியல் ஜெபறட்ணசிங்கம் காலமானார்: இவர் மனோன்மணியின் (Bank of Ceylon ஆஸ்பத்திரி வீதி) அன்புக் கணவரும், தஜிதா, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) சர்வானந்தன், வித்தியானந்தன், துஷயானந்தன், (யாழ்-பரியோவான் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. திருமதி அன்றூஸின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற ஜெயசற்குணசிங்கம், ஜெகோறட்ணசிங்கம் (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற S. செல்லத்துரை (Electrical Supdt.), திருமதி பொன்னம்மாவின் மருமகனும், திருமதி ஜெபமணி, திருமதி ஜெகசோதி ஆகியோரின் பெருமகனும், காலஞ்சென்ற திரு. ஜெயசிங்கம் (ஆசிரியர்), திரு. யேசுதாஸ் (C.W.E. Colombo) ஆகியோரின் மருமகனுமாவார்: ஆராதனை ஆடியபாதம் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 27-07-89 இன்று வியாழக்கிழமை பி. ப. 3-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நல்லூர் பரியாக்கோபு ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் !

(1239)

மனோன்மணி (மனைவி)

### திருமதி பொன்னம்மா தியாகராசா

திருமதி பொன்னம்மா தியாகராசா காலமானார்: இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி திலகா கனகலிங்கம் (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி), திரு. கைலைநாதன் (விரிவுரையாளர், யாழ்-தொழில் நுட்பக்கல்லூரி), திரு. பத்மநாதன் (கணனி விரிவுரையாளர், அவுஸ்திரேலியா), திரு. கணேசநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. சி. கனகலிங்கம் (திட்டமிடல் அதிகாரி, மட்டக்களப்பு), திருமதி மிராணி கைலைநாதன் (ஆசிரியை, றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா), திருமதி கமலம் பத்மநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும். சுகந்தன், டினூஷா, நிஷந்தன், சந்தா, அஷந்தா, அஞ்சலா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1989-07-27ஆம் திகதி இன்று வியாழக்கிழமை 24, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் உள்ள அன்னரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ் செய்யப்படும் என்பதனை உறவினர்கள், நண்பர்கள், யாவருக்கும் அறியத் தருகிறேன்.

24, குமாரசாமி வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்;

தகவல்;
தி. கைலைநாதன்

(11631)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 07 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org